## இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியம் - 2014

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு

செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் முன்னைய ஆண்டு காலப்பகுதியில் சீராக்கவேண்டிய ரூபா 30,588,521 தொகையான வருமான மிகை நிதிஏற்பாடு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் படி ஒப்பிடப்பட்ட பெறுமதி சரிசெய்யப்பட்டு மீள வெளியிடப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 24(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | சுற்றுலா வரி அறவிடும் அறிக்கை சுற்றுலா அபிவிருத்தி வரி (சு.அ.வ) அறவிடப்பட்டு 30 நாட்களுக்குள் பொதுத் திறைசேரியின் பிரதிச் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், நிதியம் இந் நியதிகளுக்கு இணங்கியிருக்கவில்லை. |
| (ஆ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டம் | |
| I. 24(3) ஆம் பிரிவு | சுற்றுலா அபிவிருத்தி வரியை முகாமைத்துவப்படுத்துவதற்கும் நிர்வகிப் பதற்குமான விதிகள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| II. 24(8) ஆம் பிரிவு | சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தில் செலவு வைக்கப்பட்டுள்ள சகல நிதிகளும் உரிய நிறுவகங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிதியத்தின் செலவில் ரூபா 250,727,130 தொகையான பணம் காணப்பட்ட போதிலும் அப்பணத்தை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 2(ஆ) ஆம் உப பிரிவு | இலங்கையிலிருந்து வெளிச்செல்லும் கப்பலில் இலங்கையிலிருந்து வெளியேறும் ஒவ்வொரு பயணிக்காகவும் வழங்கப்படும் ஒவ்வொரு கப்பற்சீட்டிலிருந்தும் வரி அறவிடப்பட்டு இதில் ஒரு பகுதி அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு கப்பலில் பயணிக்கும் பயணிகளிடமிருந்து வரி அறவிடப்பட்டு அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிராததுடன் கப்பலில் பயணிக்கும் பயணிகளிடமிருந்து அறவீடுகள் இல்லையென்பதற்கான உறுதிப்படுத்தல்களும் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | நிதிப் பிரமாண இல 169(2) | காசோலை தேறுவதற்கு முன் நிறுவனம் சேவை வழங்கிய 07 காசோலைகளுக்குரிய ரூபா 143,504 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாடுகளால் ஈட்டிய வருமானம் ரூபா 2,837 மில்லியனானதுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் வருமானம் ரூபா 2,625 மில்லியன் ஆனமையால் வருமானத்தில் ரூபா 212 மில்லியன் தொகையான அதிகரிப்புக் காணப்பட்டது. குடியகல்வு வரி வருமானம் அதிகரித்தமை வருமான அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிமீளாய்வு

மீளாய்வாண்டின் போது நிதியத்தின் வருமானம் ரூபா 2,837 மில்லியன் தொகையானதுடன் அது முன்னைய ஆண்டின் ரூபா 2,625 மில்லியன் தொகையுடன் ஒப்பிடுகையில் 8.07 சதவீத அதிகரிப்பைக் காண்பித்தது. இவ்வாறே முன்னைய ஆண்டின் நிதியத்தின் ஏனைய வருமானமாக சேகரிக்கப்பட்ட ரூபா 6 மில்லியன் தொகையுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 52 மில்லியன் தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் படி ஏனைய வருமானம் 766.6 சதவீத அதிகரிப்பைக் காண்பித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவத் திறமையீனங்கள்

#### 4.1.1 வருமானம் கைவிடப்பட்டமை

சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற சகல நிறுவனங்களினாலும் 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆவது பிரிவில் காண்பிக்கப்பட்டுள்ளதன் படி சுற்றுலா அபிவிருத்தி வரித் தொகை செலுத்த வேண்டியிருந்ததுடன் அதற்காக 2003 திசெம்பர் 11 ஆம் திகதிய 1318/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் காட்டப்பட்ட மாதிரிப் பத்திரத்தின் படி சுற்றுலா அபிவிருத்தி வரித் தொகை அறவிடும் போது ஏனைய வருமானத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட வருமான மூலங்களில் சில கைவிடப்பட்டமையால் ரூபா 20,790,729 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

#### 4.1.2 நிதிய முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தால் நிர்வாகச் செலவினமாக ரூபா 5,088,062 தொகை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிர்வாகச் செலவினக் கொடுப்பனவிற்கு 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தில் ஏற்பாடுகள் இருக்கவில்லை.

(ஆ) 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், 2003 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 1303/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் குடியகல்வு வரியாக விமானம் மூலம் வெளிச்செல்லும் சகலரிடமிருந்து 15 ஐக்கிய அமெரிக்க டொலர்களும், கப்பல் மூலம் வெளிச்செல்லும் சகலரிடமிருந்து 2.5 ஐக்கிய அமெரிக்க டொலர்களும் அறவிடப்பட வேண்டிய போதிலும், இக் குடியகல்வு வரியை அறவிடும் சிவில் விமானச் சேவைகள் சேவை பணிப்பாளர் நாயகத்தால் 2004 ஆம் ஆண்டு முதல் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஒரு ஐக்கிய அமெரிக்க டொலருக்கு ரூபா 100 எனும் அந்நிய செலாவாணிப் பரிமாற்ற அடிப்படையில் இவ் வரி அறவிடப்பட்டிருந்தமையால் 2012 ஆம் ஆண்டின் போதும் இதற்கு முன்னைய ஆண்டுகளிலும் நிதியத்திற்குக் கிடைக்க வேண்டிய குடியகல்வு வரி குறிப்பிடத்தக்களவு கிடைக்காது போயிற்று. அந்த அளவு 2012 ஆம் ஆண்டின் போது மாத்திரம் ரூபா 300 மில்லியன் எனப்

புலனாகியது.

(இ) சுற்றுலா அபிவிருத்தி வரியை அறவிட வேண்டிய நிறுவனங்கள் தொடர்பான தரவு நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒவ்வொரு ஆண்டிலும் அறவிடப்பட்ட வரி மற்றும் நிறுவனங்களது விற்பனை வருமானம் என்பன பதிவு செய்யப்படாமையால் நிலுவையான வரி தொடர்பாக ஒழுங்குமுறையொன்று இருக்கவில்லை.

(ஈ) 2003 திசெம்பர் 11 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் 1 ஆம் 4 ஆம் பந்திகளிலுள்ள கட்டளைகளின் பிரகாரம், சுற்றுலா வரித் தொகை குறிப்பிட்ட காலப் பகுதியில் செலுத்தப்பட்டிராமை காரணமாக விதிக்கப்படும் தண்டப்பணம் போதாமையால் அதிகாரசபைக்கு நிதி ரீதியான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(உ) 2003 இன் 25 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 4(2) ஆம் பிரிவின் பிரகாரம் விமானக் கம்பனியால் குறித்த காலப்பகுதியின் போது வரி செலுத்தப்பட்டிராத சந்தர்ப்பங்களில் குறித்த தண்டப்பண வட்டியுடன் அப் பணம் அறவிடப்பட்டு அதிகாரசபைக்கு அனுப்பிவைக்கப்பட்டதா என்பதற்கான உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

### 5.1 **நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க நிறுவனங்களின் நல்லாளுகை தொடர்பான சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் இறுதிக் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 02 ஆம் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 **பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான தொகைகளுக்கிடையே 05 விடயங்கள் தொடர்பில் 6 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரை கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டமையைக் காண முடியாதிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிகளை பகிர்ந்தளித்தல்

(இ) சுற்றுலா அபிவிருத்தி வரிச் சேகரிப்பு

(ஈ) குடியகல்வு வரிச் சேகரிப்பு

(உ) அனுமதிப்பத்திரமுடைய நிறுவனங்களின் நிதி அறிக்கைகளின் மீளாய்வு